# வலயக்கல்வி அலுவலகம் - வடமராட்சி

## மூன்றாம் தவணைப்பரீட்சை - 2023(2024)

197

தரம் - 06 | கத்தோலிக்கம் | நேரம் : 2.00 மணி

### பகுதி - I

**மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1. பாவ மன்னிப்பு பெறும் அருடையாளம்
   1. திருமுழுக்கு  2. ஒப்பரவு  3. உறுதிபூசுதல்  4. நற்கருணை

2. பழைய ஏற்பாட்டு நூல்களின் எண்ணிக்கை?
   1. 73  2. 16  3. 27  4. 46

3. நான்கு நற்செய்தி நூல்களுள் அடங்காதது
   1. மத்தேயு  2. மாற்கு  3. லூக்கா  4. லேவியர்

4. விசுவாசப் பிரமாணத்தில் அடங்குகின்ற சத்தியங்களின் எண்ணிக்கை
   1. 02  2. 10  3. 12  4. 07

5. புனித கன்னிமரியாள் அமல உற்பவ திருநாள் கொண்டாடப்படுவது
   1. ஆவணி - 15  2. மார்கழி - 08  3. தை - 01  4. மாசி - 08

6. இயேசுவின் பிறப்பு முதன்முதலில் அறிவிக்கப்பட்டது
   1. ஞானகளுக்கு  2. தலைமைக்குருவுக்கு
   3. ஏரோதுக்கு  4. இடையர்களுக்கு

7. திருவிவிலியத்தில் பஞ்சாகம நூல்களுள் ஒன்று
   1. தோரா  2. தொடக்கநூல்
   3. யோவான்  4. மத்தேயு

8. நாம் இறைவன் ஒருவரை மட்டும் ஆராதிக்க வேண்டும் என்பது
   1. முதலாம் இறைகட்டளை  2. இரண்டாம் இறைகட்டளை
   3. மூன்றாம் இறைகட்டளை  4. பத்தாவது இறைகட்டளை

9. கடவுள் நான்காம் நாளில் படைத்தவை
   1. சூரியன், சந்திரன்  2. சந்திரன், வானம்
   3. மனிதன், ஊர்வன  4. சூரியன், வானம்

10. தன்னைக் கொல்வதற்கு முயற்சித்தவருக்கு மன்னிப்பு அளித்த திருத்தந்தை
    1. புனித 2 ஆம் அருளப்பர் சின்னப்பர்  2. புனித பிரான்சிஸ்
    3. புனித 21ஆம் யோன் பவுல்  4. புனிதபேதுரு

11. நற்கருணைப் புதுமை நடைபெற்ற காலம்
    1. கி.பி 900  2. கி.பி 700
    3. கி.பி 800  4. கி.பி 100



kalvi.lk

12. “ஆண்டவரே இந்தப் பாவத்தை இவர்கள் மேல் சுமத்தாதேயும்” எனக் கூறி உயிர் விட்டவர்
   1. புனித ஸ்தேவான்
   2. புனிதபவுல்
   3. லூக்கா
   4. யோவான்

13. குணமளிக்கும் அருளடையாளம்
   1. நற்கருணை
   2. உறுதி பூசுதல்
   3. நோயிற் பூசுதல்
   4. திருமுழுக்கு

14. மரியாளுக்கு மங்கள வார்த்தை கூறியவர்
   1. இயேசு
   2. கபிரியேல் தூதன்
   3. ஞானிகள்
   4. எலிசபேத்

15. யோவான் நற்செய்தியின் அடையாளம்
   1. எருது
   2. மனித முகம்
   3. கழுகு
   4. சிங்கம்

($15 \times 2 = 30$ புள்ளிகள்)

02) கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து எழுதுக.

( பாவங்களை, விருப்பமானால், லூக்கா, தம்உருவில், என்னிடமிருந்து, உயிர்மூச்சை, மன்னிப்பீர்களோ, கொடுங்கள்)

1. புனித .................................................................. ஒரு வைத்தியராவார்.

2. கடவுள் ........................................ மனிதனைப் படைத்தார். அவன் நாசிகளில் ........................................ ஊதினார்.

3. எவருடைய ........................................ நீங்கள் ........................................ அவை மன்னிக்கப்படும்.

4. உங்களிடம் கேட்கிறவருக்கு ........................................................................

5. தந்தையே உமக்கு ........................................ இத் துன்பக் கிண்ணத்தை ........................................ அகற்றும்.

($5 \times 2 = 10$ புள்ளிகள்)

03) தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| 1. முதலாவது மறைசாட்சியாக உயிர்துறந்த திருத் தொண்டர் | மார்கழி 25 |
| 2. பொய்ச் சான்று சொல்லாதே | லூக்கா |
| 3. நத்தார் பெருவிழா | நற்கருணைப் புதுமை |
| 4. புனித பவுலோடு மறைத்தூதுப் பணியில் ஈடுபட்டவர் | ஸ்தேவான் |
| 5. இத்தாலியின் லஞ்சியோனா | எட்டாம் கட்டளை |

($5 \times 2 = 10$ புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி - II

**விரும்பிய ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

01)

அ) அருளடையாளங்கள் எத்தனை?

ஆ) ஒரு முறை மட்டும் பெற்றுக் கொள்ளக் கூடிய அருளடையாளங்கள் மூன்று தருக.

இ) அருளடையாளத்தின் மூலம் கிடைக்கும் அருள் வரங்கள் ஐந்து தருக.

(2+3+ 5 = 10 புள்ளிகள்)

02)

அ) கடன் திரு நாட்களில் இரண்டை குறிப்பிடுக.

ஆ) ஓய்வு நாளில் நாம் செய்யத் தகாத செயல்கள் மூன்று தருக.

இ) ஞாயிறு தினத்தை தூய்மையாக கடைப்பிடிக்க நீர் செய்யக்கூடிய செயற்பாடுகள் ஐந்து தருக.

(2+3+ 5 = 10 புள்ளிகள்)

03)

அ) செபம் என்றால் என்ன?

ஆ) பொதுச் செபங்கள் மூன்று தருக.

இ) செபத்தின் வகைகள் நான்கினையும் குறிப்பிட்டு, இறைவனுக்கு நன்றி கூறி செபம் ஒன்று எழுதுக.

(2+3+ 5 = 10 புள்ளிகள்)

04)

அ) கடவுள் படைத்த முதல் மனிதர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

ஆ) கடவுள் மனிதனுக்கு கொடுத்த பொறுப்புக்களில் மூன்றைக் குறிப்பிடுக.

இ) சூழலை அழகாக வைத்திருக்க உம்மால் செய்யக் கூடிய ஐந்து விடயங்களைக் குறிப்பிடுக.

(2+3+ 5 = 10 புள்ளிகள்)

05)

அ) இயேசுவும் அவரது பெற்றோரும் சடங்குகள் சம்பிரதாயத்திற்கு மதிப்பளித்த சந்தர்ப்பங்கள் இரண்டு தருக.

ஆ) நத்தார் தினத்திலே நீர் செய்யக் கூடிய நற்செயல்கள் மூன்றைக் குறிப்பிடுக.

இ) சிறுவன் இயேசுவின் வாழ்விலிருந்து நீர் பெற்றுக் கொள்ளக் கூடிய முன்மாதிரிகைகள் ஐந்து தருக.

(2+3+ 5 = 10 புள்ளிகள்)

06)

அ) பத்துக்கட்டளைகளில் நான்காம் கட்டளையை குறிப்பிடுக.

ஆ) ஏழாம் மற்றும் பத்தாம் கட்டளைக்கு எதிரான பாவங்கள் மூன்று தருக.

இ) பெற்றோர் மட்டில் பிள்ளைகளுக்குரிய கடமைகள் ஐந்து தருக.

(2+3+ 5 = 10 புள்ளிகள்)

07)

அ) இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

அ. படைப்பு

ஆ. திருவிவிலியம்

இ திருச்சபையின் கட்டளைகள்

ஈ. இயேசு கற்பித்த செபம்

(2+3+ 5 = 10 புள்ளிகள்)



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**



இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp 075 287 1457